பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 18 வெள்ளிக்கிழமை 03.09.2021 கதிர் 166

## ‘சன்ஷைன் சுத்த’ சுட்டுக் கொலை!

பிரபல போதைப்பொருள் வர்த்தகராகக் கருதப்படும் ‘சன்ஷைன் சுத்தா’ எனப்படும் அமில பிரசன்ன ஹெட்டிஹேவா துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை, வரக்காபிட்டிய பிரதேசத்தில் வைத்து இவர் இன்று சுட்டுக் ☞2

# கொரோனாப் பரவல் அதிகரிப்பு செப்.13 வரை ஊரடங்கு நீடிப்பு

### ஜனாதிபதி கோட்டாபய அறிவிப்பு



**இலங்கையில் தற்போது அமுலில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மேலும் ஒரு வார காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.**

**இதன்படி எதிர்வரும் 13 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையில் ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.**

**கொரோனா வைரஸ் பரவல் அதிகரிப்பு நிலைமையைக் கருத்தில் கொண்டு ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.**

☞2

## கொரோனாச் சட்டத்தை மீறிய மேலும் 577 பேர் சிக்கினார்கள்

கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 577 பேர் கடந்த 24 மணிநேரத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் 63 ஆயிரத்து 908 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்று மேல் மாகாணத்துக்குள் நுழையும் மற்றும் அங்கிருந்து வெளியேறும் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 13 சோதனைச் ☞2

## ஒரே தடவையில் அதிகளவு தடுப்பூசிகள்; 40 லட்சம் சினோபோர்ம் நாளை நாட்டுக்கு

சீனாவின் தயாரிப்பிலான 40 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் நாளை இலங்கைக்குக் கொண்டுவரப்படவுள்ளன.

இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் இந்தத் தகவலைப் பதிவிட்டுள்ளது.

ஒரே நாளில் அதிகூடிய சினோபோர்ம் தடுப்பூசிகள் நாட்டுக்குக் கிடைக்கும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

குறித்த 40 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகளுடன் சீனாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள தடுப்பூசிகளின் எண்ணிக்கை 2 கோடி 20 லட்சமாக அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.




## வன்முறைச் சம்பவங்களையடுத்து கொக்குவிலில் திடீர் சுற்றிவளைப்பு

### மோட்டார் சைக்கிள் ஒன்று மீட்பு



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்., கொக்குவில் பகுதியில் இன்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையின்போது. வன்முறைக்குப் பயன்படுத்தியதாகச் சந்தேகிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் ☞2

## யாழில் வீடொன்றில் தீ விபத்து; பெறுமதியான பொருள்கள் நாசம்

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)



யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில், ஆரியம் குளம் சந்திக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தச் சம்பவம் இன்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

வீட்டில் சுவாமி அறையில் விளக்கேற்றிவிட்டு அங்கு வசிக்கும் பெண் ஆலயம் சென்று திரும்பிய நிலையில் வீட்டிற்குள் தீ விபத்து இடம்பெற்றது என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர தீயணைப்புப் படைக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் அங்கு விரைந்த அவர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ☞2

## யாழ். வைத்தியசாலைகளில் கொரோனா சடலங்கள் தேக்கம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் அதிகளவிலான கொரோனா சடலங்கள் தேங்கிக் காணப்படுகின்றன என்று யாழ். மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இறப்பவர்களின் சடலங்களைத் தகனம் செய்வதற்கு யாழ். மாநகர சபையால் 6 ஆயிரத்து 500 ரூபா கட்டணம் அறவிடப்படுகின்றது. எனினும், குறித்த கட்டணத்தைச் செலுத்த முடியாதவர்கள் யாராவது தனிப்பட்ட முறையில் என்னைத் தொடர்பு கொண்டால் அவர்களுக்கு என்னால் உதவ முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாநகர ஆளுகைக்குள் உள்ள மின்மயானதகனம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ☞2

## யாழ். போதனா பணிப்பாளராக இன்று மீண்டும் பொறுப்பேற்ற சத்தியமூர்த்தி

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி இன்று காலை மீண்டும் பொறுப்பேற்றார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிப்பாளராகக் கடந்த பல வருடங்களாகச் செயற்பட்டு வந்த வைத்தியர் சத்தியமூர்த்தி மேலதிக கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டுக்குச் சென்றிருந்தார்.

இந்நிலையில், யாழ். போதனா ☞2

## யாழில் வீடொன்றில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த போதிலும் வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்கள் பலவும் எரிந்து நாசமாகியுள்ளன.

## கொரோனாச் சட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவடிகளில் 994 வாகனங்களில் பயணித்த 1,796 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## வன்முறைச் சம்பவங் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவுக்குட்பட்ட கொக்குவில் பகுதியில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையில் இன்று அதிகாலை இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஆகியோரால் விசேட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

யாழ். குடாநாட்டில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் அவ்விடங்களில் பதுங்கியுள்ளனர் என்று கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து இன்று அதிகாலை 4 மணி முதல் காலை 8 மணி வரை நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் கொக்குவிலின் ஒரு பகுதியைச் சுற்றிவளைத்துச் சந்தேகத்துக்கிடமான வீடுகளில் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இன்று அதிகாலை திடீரென மேற்கொள்ளப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வன்முறைச் சம்பவங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது எனச் சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஊரடங்கு வேளைகளில் வாள்வெட்டுச் சம்பவங்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் அதிகமாக அரங்கேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். வைத்திய ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி மரணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்கள் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் அமைந்துள்ள மின் தகன மயானத்தில் தகனம் செய்யப்பட்டு வருகின்றனர். இந்த மயானம் யாழ். மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்டது.

குறித்த மயானத்தில் நாளொன்றுக்கு 5 உடல்கள் தகனம் செய்யப்பட்டு வருகின்றன. எனினும், எதிர்வரும் 8ஆம் திகதிவரை சடலங்களை எரிப்பதற்கான முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் வைத்தியசாலைகளில் அதிகளவிலான சடலங்கள் தேங்கிக் காணப்படுகின்றன.

நாளொன்றுக்கு அதிகளவிலான சடலங்களை எரியூட்டுவதற்கான தகைமை எம்மிடம் இல்லை. அதையும் மீறி நாங்கள் ஒன்று இரண்டு சடலங்களைக் கூடுதலாக எரியூட்டும்போது குறித்த எரியூட்டி அடிக்கடி பழுதடையக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

எனவே, எரியூட்டும் தகைமையை அதிரித்து எமக்கு இன்னுமோர் எரியூட்டியை வழங்குமாறு நாம் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். குறித்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் நாளொன்றுக்கு அதிகளவிலான சடலங்களை எம்மால் எரியூட்ட முடியும்.

எங்களுக்கு எரியூட்டி வழங்கப்படாவிட்டால் கூட பரவாயில்லை. வேறு ஒரு மயானத்துக்காவது வழங்குங்கள். ஏனெனில் யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்களைத் தகனம் செய்ய தற்போது ஒரேயொரு இடம்தான் உள்ளது. இப்போதுள்ள நிலைமையில் இது போதாது - என்றார்.

## யாழ். போதனா ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலை பணிப்பாளராக இன்று தனது கடமைகளை அவர் உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார்.

# நியூசிலாந்தில் மக்கள் மீது தாக்குதல் நடத்திய இலங்கையர் சுட்டுக்கொலை

நியூசிலாந்தின் ஒக்லன்ட் புறநகரான நியூலினில் பகுதியிலுள்ள சூப்பர் மார்க்கெட் ஒன்றில் 06 பேரைக் கத்தியால் குத்திக் காயப்படுத்திய ஒருவரைப் பொலிஸார் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இதன்போது குறித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று நியூசிலாந்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் சூப்பர் மார்க்கெட்டுக்குள் புகுந்து அங்கிருந்தவர்கள் மீது கத்தியால் தாக்குதல் நடத்தியுள்ள நிலையில், உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் அந்த நபர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தி அவரைக் கொன்றுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அந்த நபரின் கத்திக் குத்துக்கு இலக்கான 6 பேரில் மூன்று பேர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், துப்பாக்கிச் சூட்டில் பலியான நபர், ஏற்கனவே பொலிஸாரின் கண்காணிப்பில் இருந்த இலங்கையர் என்று நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 வருடங்களாக இந்த நபர் நியூசிலாந்தில் வசிக்கும் நிலையில், இவர் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்பட்டனர் என்று பிரதமர் கூறியுள்ளார்.

குறித்த நபரால் நடத்தப்பட்ட தாக்குதலைப் பயங்கரவாதத் தாக்குதலாக கருதுவதாகவும் நியூசிலாந்து பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 'சன்ஷைன் சுத்த' .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் மாகந்துரே மதூஸுக்கு மிகவும் நெருக்கமான உதவியாளராகச் செயற்பட்டு வந்திருந்த ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கொரோனாப் பரவல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மாதம் 20ஆம் திகதி நாட்டில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் இதற்கு முன்னர் எதிர்வரும் 6ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இன்று காலை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில், தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில்கொண்டு ஊரடங்கை மேலும் ஒருவார காலத்துக்கு நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# மரண அறிவித்தல்

மலர்வு
29 – 05 – 1927



உதிர்வு
02 – 09 – 2021

## அமரர் சண்முகம்பிள்ளை கனகலிங்கம்

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம்பிள்ளை கனகலிங்கம் அவர்கள் 02.09.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை செல்வலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தனலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம், கனகாம்பிகை மற்றும் பரமலிங்கம், யோகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலைச்செல்வி, குணச்செல்வன் மற்றும் காலஞ்சென்ற கருணானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், முருகவேல், சோபனா, சீத்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், கலாநிதியின் ஆசையப்பாவும், மாதங்கி, சேயோன், சாம்பவி, டயான், அருண்முகிலன், ஆர்த்தி, சாய்கிதன் ஆகியோரின் அன்புப் பேரனாரும், அகன்யனின் அன்புப் பூட்டப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 7 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2ஆம் கள்ளி ஒழுங்கை,
சங்கரத்தை வட்டுக்கோட்டை.**

**தகவல்:-குடும்பத்தினர்.
தொலைபேசி:0779007581**



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# இந்த அரசு நம் தலையெழுத்து

**ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கி வந்துள்ள ஏற்றுமதிக்கான ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை தக்கவைப்பது மிக மிக அத்தியாவசியமானது. அதனால் அதுகுறித்து அரசு மிகுந்த அவதானமும் சிரத்தையும் எடுக்க வேண்டுமென இலங்கை ஆடைத் தொழில் உற்பத்தியாளர்கள் தரப்பு வலியுறுத்தி இருக்கின்றது.**

**இலங்கையின் ஏற்றுமதித் துறை நின்று, நிலைத்துத் தாக்குப்பிடிப்பதற்கு இந்தச் சலுகை மிக முக்கியமானது. இது தொடர்பில் உடன் விசேட கவனிப்பு மேற்கொள்வது அரசின் கட்டாயப் பொறுப்பு என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

**கடந்த ஐந்து வருடங்களில் எமது ஏற்றுமதி உற்பத்தி தாக்குப்பிடித்து நின்றமைக்கு ஐரோப்பிய நாடுகளுக்கான எமது ஆடை உற்பத்தி ஏற்றுமதிதான் பிரதான காரணம். ஐரோப்பிய சந்தைகளுக்கான எங்களது பல ரக ஏற்றுமதிகள் மூலம் 500 கோடி டொலருக்கு (சுமார் லட்சம் கோடி ரூபாவுக்கு) அதிகமான வருமானத்தை ஈட்ட முடிந்தது. எமது உற்பத்தி ஏற்றுமதி தந்திரோபாயத்தில் இந்த வரிச் சலுகை திட்டம் மிகப் பிரதானமானது என்று ஹைட்ராமணி குழும கம்பனிகளின் இயக்குநர் அருண் ஹைட்ராமணி கூறியிருக்கின்றார்.**

**மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பியில்) 16 வீதத்தை இந்த உற்பத்தி நிரப்புகிறது. 2019 புள்ளிவிவரத்தின்படி நாட்டின் மொத்த ஏற்றுமதி பெறுமதியில் 43 வீதத்திற்கு உரியது இந்தத் துறை.**

**இலங்கையில் மொத்த ஏற்றுமதி 2019 இல் 5.3 பில்லியன் டொலர்களாக இருந்தது. கொவிட் தொற்று நெருக்கடிகளால் அது 4.6 பில்லியன் டொலர்களாக வீழ்ச்சி அடைந்தது. எனினும் அதில் பெரு வீழ்ச்சி ஏற்படாத அளவுக்கு, ஏற்றுமதி துறையையும் அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தையும் தக்க வைத்து, நிலைநிறுத்தியிருப்பது இந்த ஆடை உற்பத்தித் துறைதான் என்பது குறிப்பிடத்தக்கது.**

**நாட்டின் பதினாறு வீதமான தொழிலாளர்கள் வலு– சுமார் 10 லட்சம் தொழிலாளர்கள் – நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்த தொழில்துறையிலேயே தங்கியுள்ளனர். நேரடியாக மூன்று லட்சம் தொழிலாளர்கள் – அவர்களில் 70 வீதத்தினர் மகளிர் – இந்தத் துறையில் பணியாற்றுகின்றனர்.**

**இத்தகைய வர்த்தக ஏற்றுமதியை விருத்தி செய்வதன் மூலமே நாட்டையும் பொருளாதாரத்தையும் அரசு தக்க வைத்துக் கொள்ள முடியும்.**

**ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கியுள்ள வர்த்தக முன்னுரிமை அல்லது சலுகை ஒப்பந்தம் இலங்கையின் ஏற்றுமதிக்கு மிகப்பெரிய வரப்பிரசாதம். அதை தக்க வைப்பது மட்டுமல்லாமல், அதுபோன்ற ஒப்பந்தங்களை இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுடன் செய்து கொள்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தையும் அதன் மூலம் நாட்டையும் மேன்மை அடையச் செய்ய முடியும் என்று துறைசார் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

**பங்களாதேஷ் தனது மொத்த ஏற்றுமதியில் 70 வீதத்தை இத்தகைய சலுகைகளை வழங்கும் வர்த்தக ஒப்பந்தங் கள் மூலமே முன்னெடுத்து சாதனை படைத்துத் தனது பொருளாதாரத்தை மீட்டுக் கட்டியெழுப்பி வருகின்றது என்றும் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

**பொருளாதாரத்தில் மோசமான நிலையில் இருந்த பங்களாதேஷிடமே இன்று கடன் யாசகம் பெறும் மோசமான நிலைக்கு சென்றிருக்கும் நமது நாடு – இலங்கை – இத்தகைய பொருளாதார வருமானம் ஈட்டித் தரக்கூடிய அமுதசுரபி போன்ற – அட்சய பாத்திரமான – ஏற்றுமதிச் சலுகைகளை கூட தனது பிடிவாதமான பௌத்த சிங்களப் பேரினவாத வெறிப் போக்கினால் தொலைக்கும் இழி நிலையில் இருக்கின்றது.**

**மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பில் சர்வதேச நியமங்களை கொழும்பு அரசு உறுதிப்படுத்தினால் மட்டுமே இத்தகைய சலுகை வாய்ப்புகள், நமது நாட்டுக்குத் தொடர்ந்து கிட்டுவது உறுதியாகும். அது புரிந்தும், இனவாத மிதப்பில், அட்டகாச மெத்தனத்தில் தொடர்ந்தும் பயணித்து, அத்தகைய சலுகைகளை எல்லாம் பறிகொடுத்து, நாட்டைக் குட்டிச்சுவராக்கக் கங்கணம் கட்டி நிற்கிறது இந்த ஆட்சிப் பீடம். அது, நாட்டினதும் மக்களினதும் தலையெழுத்து. நாம் என்ன செய்ய முடியும்?**

# இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இருந்துவரும் பயணிகளுக்கு இத்தாலி கடும் கட்டுப்பாடுகள்

இலங்கை, இந்தியா, பிரேஸில், பங்களாதேஷ் உள்ளிட்ட ஈ- பட்டியல் நாடுகளில் இருந்து இத்தாலி வரும் பயணிகளுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலிய வெளியுறவு அமைச்சகம் இதனைத் தெரிவித்துள்ளது. ஓகஸ்ட் 30 ஆம் திகதி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய விதிகளின்படி மேலே குறிப்பிட்டுள்ள நாடுகளில் இருந்து வருபவர்கள் உடல்நலம், கல்வி அல்லது வேலை தொடர்பான நோக்கங்களுக்காகப் பயணம் செய்தால் மட்டுமே நாட்டுக்குள் நுழைய அனுமதிக்கப்படுகின்றார்கள்.

மேலதிகமாக ஏனைய அத்தியாவசிய நோக்கங்களுக்காக பயணம் செய்பவர்களுக்கும், தங்கள் சொந்த நாடுகளுக்கு அல்லது அவர்கள் வசிக்கும் இடத்துக்கு திரும்புவோருக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14 நாள்களில் இந்த நாடுகளுக்கு பயணம் செய்த அல்லது தங்கியிருந்த பயணிகள் வேலை, படிப்பு, சுகாதாரம் அல்லது பிற அத்தியாவசிய காரணங்களுக்காக பிரத்தியேகமாக இத்தாலிக்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். - என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈ - பட்டியலில் இடம்பிடித்துள்ள ஒரு நாட்டிலிருந்து இத்தாலிக்குள் நுழையும் அனைத்து நபர்களும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள செயற்பாடுகளைப் பின்பற்ற வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

டிஜிற்றல் பயணிகள் லொக்கேட்டர் படிவத்தை நிரப்ப வேண்டும்.

இத்தாலிக்குள் நுழைவதற்கு 72 மணி நேரத்திற்குள் பி.சி.ஆர். அல்லது விரைவான அன்டிஜன் சோதனை முடிவை வழங்க வேண்டும்.

மருத்துவ மேற்பார்வையின் கீழ் பத்து நாள்களுக்கு சுயதனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும்.

கூடுதலாக, சுயதனிமைப் படுத்தல் காலம் முடிந்த பிறகு, அனைவரும் இரண்டாவது கொவிட் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

வைரஸின் அறிகுறிகளைக் காண்பிப்பவர்கள், தங்கள் நிலை தொடர்பாக உடனடியாக சுகாதார அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும், தனிமைப்படுத்தப்பட்டு, தகுதியான அதிகாரிகளின் முடிவிற்காகக் காத்திருக்க வேண்டும்.

ஈ - பட்டியலில் உள்ள நாடுகளுக்கு எதிராக கடுமையான விதிகளை விதிப்பதைத் தவிர, செப்டெம்பர் முதலாம் திகதி முதல், நாட்டுக்குள் நுழையும் அனைத்து நபர்களும் விமானங்கள், கப்பல்களில் பயணிக்க கிறீன் பாஸ் அல்லது அதற்கு இணையான சான்றிதழ் வைத்திருக்க வேண்டும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, உணவகங்கள், பார்கள், கஃபேக்கள், திரையரங்குகள், அருங்காட்சியகங்கள், பொது இடங்கள் மற்றும் செயல்பாடுகளை அணுக விரும்புவோருக்கு மட்டுமே கிறீன் பாஸ் கட்டாயமாக இருந்தது.

இதன் காரணமாக தடுப்பூசி போட்டவர்கள் அல்லது கொவிட் -19 நோயிலிருந்து மீண்டவர்கள் மற்றும் எதிர்மறை சோதனை முடிவைக் கொண்டவர்கள் அனைவரும் பொது இடங்களில் செல்லும் போது தேவைகளுக்கு உட்பட்டிருக்க மாட்டார்கள்.

தொற்றுநோயியல் ரீதியாகப் பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இருந்து அமெரிக்காவை நீக்க ஐரோப்பிய ஒன்றிய பரிந்துரையின் படி, கடுமையான விதிகள் அமெரிக்காவிலிருந்து வருபவர்களுக்கும் பொருந்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், பிரித்தானியாவில் இருந்து வரும் பயணிகள் இனி தனிமைப்படுத்தல் அல்லது சோதனை விதிகளை பின்பற்ற வேண்டியதில்லை என இத்தாலிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# தண்ணிமுறிப்பு பகுதியில் மக்களின் காணி அபகரிப்பு

## சார்ள்ஸ் நேரில் சென்று ஆய்வு



தண்ணிமுறிப்பு பகுதியில் இடம்பெறுகின்ற காணி அபகரிப்பு தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று ஆராய்ந்தார்.

மேற்படி இடத்திற்கு நேற்று (வியாழக்கிழமை) களவிஜயம் மேற்கொண்ட அவர், நிலைமைகள் தொடர்பாகப் பார்வையிட்டதுடன், மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் நிலைமைகள் தொடர்பாக தொலைபேசியூடாகக் கலந்துரையாடினார்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர்பிரிவுக்குஉட்பட்டதண்ணிமுறிப்பு பகுதியில்வசித்தமக்கள்யுத்தசூழ்நிலைகளால் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் குடியமர்ந்தனர்.

இந்த மக்கள் தற்போது தமது காணிகளுக்குச் சென்று விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வனவளத்திணைக்களத்தினர் தடை விதித்து வருகின்றனர் என மக்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே, தம்மில் பலருக்கு வேறு விவசாயக் காணிகள் இல்லை என இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு 45 பேருக்குச் சொந்தமான சுமார் 170 ஏக்கர் காணியில் விவசாயம் செய்வதற்கும் குடியமர்வதற்கும் வனவளத்திணைக்களம் தடையாக உள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பெண்களுக்குத் திருமண வாக்குறுதியளித்து நிதிமோசடி செய்த இராணுவ வீரர் சிக்கினார்

பெண்களை திருமணம் செய்து கொள்கிறேன் என நம்ப வைத்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த இரு வருடங்களாக தேடப்பட்டு வந்த முன்னாள் இராணுவ வீரர் ஒருவரை கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவ வீரர், இலங்கையில் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகளின் பட்டியலில் உள்ளவர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பத்திரிகைகளில் வெளியாகும் திருமணம் தொடர்பிலான விளம்பரங்களை மையப்படுத்தி பெண்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பண மோசடியில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர், தன்னை உயர் பதவியில் உள்ள ஒருவராக சித்திரித்து திருமணம் செய்துகொள்ளும் உறுதிமொழியை பெண்களுக்கு வழங்கியுள்ளார் எனவும், தனது தாயாருக்கு புற்றுநோய் எனக் கூறி அவர்களிடம் கைம்மாற்றுக்கு பணம் பெற்றுக்கொண்டு, அதனை திருப்பிக் கொடுக்காது இந்த மோசடிகளை செய்துள்ளார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபரால் பாதிக்கப்பட்ட 5 பெண்கள் அளித்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை ஆரம்பித்த சி.சி.டி. அதிகாரிகள் 2 வருடங்களின் பின்னர் சந்தேக நபரைக் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# தலிபான்களின் தலைவராக முல்லா ஹெபத்துல்லா!

## அமைச்சரவையில் பெண்களுக்கு இடமில்லை



ஆப்கானிஸ்தானின் ஆட்சியைத் தலிபான்கள் கைப்பற்றி உள்ளதைத் தொடர்ந்து புதிய அரசை அமைப்பதற்கான நடவடிக்கைகளை அவர்கள் முடுக்கி விட்டு உள்ளனர். புதிய அரசு குறித்த ஆலோசனைகள் முடிவடைந்துள்ள நிலையில் தலிபான்கள் தங்கள் அரசின் உச்சபட்ச தலைவராக மூத்த மதத் தலைவரான முல்லா ஹெபத்துல்லா அகுந்த்ஸடாவை (வயது 60) தெரிவுசெய்துள்ளனர் என்று தலிபான்களின் தகவல் மற்றும் கலாசாரப் பிரிவின் மூத்த அதிகாரிகளில் ஒருவரான முப்தி இனாமுல்லா சமங்கானி தெரிவித்தார். அத்தோடு புதிய நிர்வாக அமைப்புக்கான பெயர், தேசியக்கொடி மற்றும் தேசிய கீதம் ஆகியவை இன்னும் முடிவுசெய்யப்படவில்லை. அமைச்சரவை குறித்த விவாதங்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்று முப்தி இனாமுல்லா சமங்கானி மேலும் தெரிவித்தார். ஆப்கானிஸ்தானின் புதிய அரசு குறித்து ஓரிரு நாளில் அறிவிக்கப்படும் எனவும் அவர் கூறினார். ஆப்கானிஸ்தானில் புதிய அரசு கட்டமைப்பில் ஈரானை பின்பற்ற தலிபான்கள் முடிவு செய்துள்ளனர். இது ஒருபுறம் இருக்க, ஆப்கானிஸ்தானின் புதிய அமைச்சரவையில் பெண்களுக்கு இடமில்லை என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர். குரான் மற்றும் ரியா சட்டப்படி பெண்கள் அமைச்சர்களாக இருக்க முடியாது. அதன்படி ஆப்கானிஸ்தானின் புதிய அரசிலும் பெண்கள் இடம் பெறமாட்டார்கள். ஆனால் அமைச்சகங்கள், பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களில் உதவியாளர்களாக அவர்கள் பணியாற்ற முடியும். ஆப்கானிஸ்தான் பெண்கள் பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கு தடை விதிக்க முடியாது என்று தலிபான் செய்தித் தொடர்பாளரான சபியுல்லா முஜாகித் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.



# காதலை வென்ற ஜப்பான் இளவரசி

காதலுக்காக அரச குடும்பத்தின் சொத்தை விட்டுக்கொடுத்த ஜப்பான் இளவரசி மகோ, பாரம்பரிய விழாக்கள் இல்லாமல் சாதாரண நபரைப் போல் திருமணம் செய்துகொள்ளவிருக்கிறார். ஜப்பான் பேரரசர் நருஹிட்டோ. இவரது மருமகள் மகோ. இவர் அரச குடும்பத்தைச் சாராத கெய் கொமுரோ என்பவரைக் காதலித்து வந்தார். அரசக் குடும்பத்துப் பெண்கள் சாதாரண நபர்களைத் திருமணம் செய்துகொள்ள தடை உள்ளது. இதனால் கடந்த பல ஆண்டுகளாகவே இவர்களின் திருமணத்துக்கு முட்டுக்கட்டை நிலவுகிறது. இந்நிலையில், இந்த ஜோடி பாரம்பரிய முறையில் இல்லாமல், வழக்கமான கொண்டாட்டங்களைத் தவிர்த்து சாமானியர்களைப் போல் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்துள்ளனர். தனது காதலுக்காக அரச குடும்பத்தின் சொத்தை விட்டுக் கொடுத்துள்ளார். அவர் விட்டுக் கொடுத்த தொகை 13.7 கோடி யென் அதாவது 12 லட்சம் டொலர் எனக் கூறப்படுகிறது.

# சீனா தான் எங்கள் தோழன்!

## தலிபான்கள் தெரிவிப்பு

சீனா தான் எங்களின் முக்கிய தோழன். எமது புதிய தேசத்தை மீள்கட்டமைப்பு செய்வதற்குச் சீன நிதியையே நம்பியுள்ளோம் என்று தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிபுல்லா முஜாகிதீன் தெரிவித்துள்ளார். இத்தாலியப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

தேசத்தை மீள் கட்டமைப்பதில் சீனா தான் எங்களின் முக்கிய தோழன். அவர்களுடனான இணக்கமான போக்கு எங்களுக்கு மிகப்பெரிய வாய்ப்புகளை திறந்துவைக்கும். சீனா எங்கள் நாட்டில் முதலீடு செய்யத் தயாராக இருக்கிறது.

எங்கள் தேசத்தை மீள் கட்டமைப்பு செய்யவும் தயாராக இருக்கிறது. நாட்டில் வளமான தாமிர சுரங்கங்கள் உள்ளன. சீனாவின் உதவியால் இவற்றை மீண்டும் இயக்க முடியும். சீனா இந்தச் சுரங்கங்களை நவீனப்படுத்தும். அதுமட்டுமல்ல சீனாவின் வழியாகத்தான் நாங்கள் உலகச் சந்தையையும் அடைய முடியும் – என்றுள்ளார்.



# அமெரிக்காவை மூழ்கடித்தது ஐடா! 42பேர் பரிதாபமாக உயிரிழப்பு

அமெரிக்காவின் பல மாகாணங்களிலும் வீசிய ஐடா சூறாவளி, தற்போது நியூயோர்க் நகரில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்தப் புயல்காரணமாக ஏற்பட்ட கடும் மழையால் வடகிழக்கு அமெரிக்காவில் 2 வயதுச் சிறுவன் உட்பட 42 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். மூன்று நாள்களுக்கு முன்பு தெற்கு மாகாணமான லூசியானாவில் வீசிய ஐடா சூறாவளி காரணமாகப் பெய்த மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அங்குள்ள நகர வீதிகளில் வெள்ளம் ஓடுகிறது. லூயிசியானா, மிஸ்ஸிசிப்பியில் சூறாவளி இடர் ஏற்படுத்திய தாக்கம் அதிகம்.

இவ்வாறாக அமெரிக்காவின் பிரதான நிலப்பகுதியில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது ஐடா புயல்.



# சீனாவின் தடுப்பூசிகளை நிராகரித்தது வடகொரியா

சீனாவிலிருந்து வந்த 30 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகளை வடகொரியா நிராகரித்துள்ளது. இதுகுறித்து சர்வதேச ஊடகங்கள், 'சீனாவிலிருந்து கொரோனா பரவுகிறது என்ற தகவல் வெளியானவுடன் முதல் நாடாக நாடு முழுவதும் ஊரடங்கை அறிவித்தது வடகொரியா. இதுவரை வடகொரியாவில் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் உறுதிப்படுத்தாத நிலையில், கொரோனாத் தடுப்பூசிகளை வடகொரியாவுக்கு சீனா வழங்கி வந்தது. இந்நிலையில்தான் சீனா வழங்கிய சுமார் 30 லட்சம் சினோவாக் கொரோனாத் தடுப்பூசிகளை வடகொரியா நிராகரித்துள்ளது.

# எங்கள் அரசுக்கு ஆதரவு தாருங்கள் தலிபான்கள் சார்பில் வேண்டுகோள்

எங்கள் புதிய அரசுக்கு ஆதரவு தாருங்கள் என்று உலக நாடுகளுக்கு தலிபான் முன்னாள் அரசியல் தலைவர் சயீது முகமது தய்யப் அகா வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆப்கானைக் கைப்பற்றிப் புதிய அரசை அமைத்துள்ள நிலையில்தான் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். சர்வதேச சமூகம் ஆப்கானை தனிமைப்படுத்திவிடக் கூடாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். அகா, முல்லா முகமது ஒமரின் தலைமையின் போது தலிபான்களின் அரசியல் ஆணையராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தலிபான்களுக்குப் புதிய தலைவலி!

Panjshir Valley: Anti-Taliban stronghold




ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றிய கையோடு அங்கு புதிய அரசு அமைப்பதைப் பற்றித் தலிபான்கள் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் நிலையில், உள்நாட்டிலுள்ள ஆயுதக் குழு ஒன்றால் தலிபான்களுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது.

தலைநகர் காபூலுக்கு வட கிழக்கே உள்ள பஞ்ஷிர் பள்ளத்தாக்குப் பகுதியில் வசிப்பவர்கள் தான் தலிபான்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தியிருக்கிறார்கள்.

அவர்களை ஆயுதங்களைக் கைவிடும்படி தலிபான் இயக்கத்தின் மூத்த தலைவர் அமீர் கான் மோடாக்கி கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆனால் பஞ்ஷிர் மக்கள் அதற்கு உடன்படவில்லை. தலிபான்கள் காபூலைக் கைப்பற்றிய பிறகு பஞ்ஷிரை நோக்கி தலிபான்கள் குறிவைத்து போரிட்டு வருகின்றனர்.

ஆனால் அவர்களுக்கு இதுவரை எந்த வெற்றியும் கிடைக்கவில்லை. மாறாக தலிபான்களில் ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

கிழக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள பஞ்ஷிர் பள்ளத்தாக்கு தேசிய எதிர்ப்பு முன்னணியின் இருப்பிடம்.

இந்த அமைப்பு பல இனக் குழுக்கள் மற்றும் முன்னாள் ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு படை வீரர்களைக் கொண்டது. கடுமையான பயிற்சியும், ஆயுதங்களையும் பெற்றவர்களாக இவர்கள் இருப்பதால் தலிபான்களுக்கு இவர்களால் பிரச்சினைகள் தொடர வாய்ப்பிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது.

# திராவிடக் களஞ்சியம், சங்க இலக்கியம் இரண்டும் வேறானவையென அமைச்சர் தென்னரசு விளக்கம்



சங்கத் தமிழ் நூல் தொகுப்பிற்கு திராவிடக் களஞ்சியம் என பெயர் சூட்டுவதாக விமர்சனம் எழுந்த நிலையில், இரண்டும் வேறுவேறான திட்டங்கள் என தமிழ் ஆட்சிமொழித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கமளித்துள்ளார்.

சட்டப்பேரவையில் அண்மையில் நடைபெற்ற தமிழ் வளர்ச்சித்துறை மானியக்கோரிக்கையின்போது, திராவிடக் களஞ்சியம் என்ற தொகுப்பு நூல் வெளியிடப்படும் என அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்திருந்தார்.

இது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள தமிழ்த்தேசிய பேரியக்கத்தின் தலைவர் பெ.மணியரசன், சங்கத் தமிழ் நூல்கள் எதிலும் திராவிட என்ற சொல்லே கிடையாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் இன உணர்வும், தமிழ்த் தேசியமும் வளர்ந்து வரும் இக்காலத்தில் தமிழ் -தமிழினப் பெருமிதங்களை திராவிட மாயையில் மறைக்கும் செயலை தி.மு.க. கைவிட்டால் நல்லது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

திராவிடக் களஞ்சியம் என்பதற்கு பதில் தமிழ்க் களஞ்சியம் என்றே குறிப்பிட வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானும் தெரிவித்துள்ளார். மேலும் பலரும் இந்த விடயம் தொடர்பாக தங்களது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த விமர்சனங்களுக்கு பதிலளித்துள்ள தமிழக தமிழ் ஆட்சிமொழித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சங்க இலக்கியத் தொகுப்பு என்பது வேறு, திராவிடக் களஞ்சியத் தொகுப்பு என்பதுவேறு என தெளிவுபடுத்தியுள்ளார்.

இது தொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்துள்ள அமைச்சர் தங்கம் தென்னரசு, “சரியாக புரிந்துகொள்ளாததால் ஏற்பட்ட விளைவுதான் இது. சங்க இலக்கியங்களை சந்தி பிரித்து இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் சங்க இலக்கியத் தொகுப்பு உருவாக்கித் தரப்படும் இது ஒன்று. அதேபோல மற்றொன்று, திராவிடக் களஞ்சியத்தை உருவாக்குவது. திராவிடத்தின் கொள்கைளை உருவாக்கு-வது. உதாரணமாக, மாநில சுயாட்சி, இருமொழிக் கொள்கை, இட ஒதுக்கீடு, சமூக நீதி என பல கொள்கைகளை திராவிடம் முன்னெடுத்துள்ளது.

இது குறித்து திராவிட இயக்கத்தின் ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கிய தொகுப்பை உருவாக்குவதுதான் திராவிடக் களஞ்சியம். எனவே, இரண்டையும் போட்டு குழப்பிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை” என்று தெரிவித்துள்ளார்.

திராவிடக் களஞ்சியம் தொகுப்பு நூல் விவகாரத்தில் மக்களைக் குழப்ப வேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ள அமைச்சர் தங்கம் தென்னரசு, குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க நினைக்கும் சிலரது முயற்சி பலிக்காது எனவும் குறிப்பிட்டுள்ளார்.




## கோர்பிவாக்ஸ் எனும் இளையோருக்கான தடுப்பூசியின் அடுத்த கட்ட சோதனைகளுக்கு இந்திய அரசு அனுமதி

இந்தியாவில் 5 முதல் 18 வயதுக்குட்பட்டோரிடம் சில நிபந்தனைகளுடன் கோர்பிவாக்ஸ் (Corbevax) எனும் கொரோனாவுக்கான தடுப்பூசிக் கான சோதனைகளை நடத்த பயோலஜிகல்-இ என்ற நிறுவனத்திற்கு இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டாளர் அனுமதி வழங்கியுள்ளார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பயோலஜிகல்- இ என்ற நிறுவனத்தால் முற்றிலும் இந்தியாவிலேயே தயாரான கோர்பிவாக்ஸ் தடுப்பூசியை மனிதர்களிடத்தில் பரிசோதித்துப் பார்க்கலாம் என்று இந்திய மருந்து கட்டுப்பாட்டு அமையத்தின் தடுப்பூசி நிபுணர் குழு பரிந்துரைத்தது. இதைத் தொடர்ந்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்தச் சோதனை பத்து இடங்களில் நடத்தப்படும் எனவும் கூறப்படுகிறது.

ஆர்.பி.டி. என்ற புரதத்தின் அடிப்படையிலான இந்தத் தடுப்பூசியின் இரண்டு மற்றும் 3 ஆம் கட்டச் சோதனைகள் தற்போது 18 வயதுக்கு மேற்பட்டோரிடம் நடத்தப்பட்டு வருகின்றன. இது செலுத்தப்படும்போது கொரோனா, ஸ்பைக் புரதத்தினை உற்பத்தி செய்து உடலில் அதற்கு எதிரான நோயெதிர்ப்புச் சக்தியைத் தூண்டும். இந்தத் தடுப்பூசியை 3 டோஸ்கள் செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

சைடஸ் கடிலா நிறுவனத்தின் இந்தியத் தயாரிப்பான சைகோவ்-டி (ZyCoV-D)என்ற கொரோனாத் தடுப்பூசியை, 12-18 வயதிற்குட்பட்டோருக்கு அவசர பயன்பாட்டுக்கு வழங்க ஏற்கனவே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் பயன்பாடு வரும் ஒக்டோபர் முதல் வாரத்திலிருந்து தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாரத் பயோடெக்கின் கோவாக்ஸினின் சிறுவயதினருக்கான தடுப்பூசிகளின் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டச் சோதனைகளும் தற்போது நடந்துவருகின்றன, அவற்றின் முடிவுகள் செப்டெம்பரில் வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயோலஜிகல்- இ நிறுவனத்தின் பெரியவர்களுக்கான கோர்பிவாக்ஸ் தடுப்பூசியின் 30 கோடி டோஸ்களுக்கு இந்திய அரசாங்கம் 1,500 கோடி ரூபா முன்பணம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காங்கிரஸ் கட்சியில் பிரசாந்த் கிஷோர் இணைவு குறித்து சோனியா விரைவில் முடிவு

இந்தியாவின் பிரபல தேர்தல் வியூக நிபுணரான பிரசாந்த் கிஷோர், காங்கிரஸ் கட்சியில் இணைவது தொடர்பாக ஆர்வம் காட்டிவருகிறார் என செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, பொதுச் செயலாளர் பிரியங்கா ஆகியோரை ஏற்கனவே அவர் சந்தித்து பேசியிருக்கிறேன் எனவும் கூறப்படுகிறது.



ஆனால், பிரசாந்த் கிஷோரை காங்கிரஸில் இணைப்பது தொடர்பாக கட்சியின் மூத்த தலைவர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு நிலவி வருவதாகவும் சிலர் அவரைக் கட்சியில் இணைக்க எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர் எனவும் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களுடன் இது தொடர்பாக கட்சித்தலைவர் சோனியா காந்தி ஆலோசனையில் ஈடுபட்டார் எனவும் ஆயினும், இதிலும் கலவையான பதில்களே கிடைத்துள்ளன என்றும் கூறப்படுகிறது.

ராகுல், பிரியங்கா ஆகியோர் பிரசாந்த் கிஷோரை கட்சியில் இணைப்பதற்குப் பச்சைக்கொடி காட்டினாலும் சில தலைவர்கள் இன்னும் அதற்கு ஆதரவைத் தெரிவிக்கவில்லை. எனவே, இந்த விவகாரத்தில் மேலும் சில கட்சித்தலைவர்களுடனான பேச்சுகளின் பின்னர் சோனியா இறுதி முடிவை எடுப்பார் எனவும், இது தொடர்பாக விரைவில் அவர் அறிவிப்பார் எனவும் கட்சி வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.




## இந்தியாவில் 8,000 நேரடிப் பணியாளர்களை உள்வாங்குவதற்கு அமேசான் நிறுவனம் திட்டம்

அமேசான் நிறுவனம் இந்தியாவில் இந்த ஆண்டு 35 நகரங்களில் 8,000 இற்கும் மேற்பட்ட நேரடிப் பணியாளர்களை வேலைக்கு அமர்த்தத் திட்டமிட்டுள்ளது. இதற்காக செப்டெம்பர் 16 ஆம் திகதி முதல் வேலைவாய்ப்பு முகாம்களை அமேசான் நடத்தவுள்ளது.

இது தொடர்பாக அமேசான் மனிதவளத் தலைவர் மேனா தீப்தி வர்மா தகவல் வழங்குகையில், அமேசான் தனது பன்னாட்டு வர்த்தகம், தொழில்நுட்பம், வாடிக்கையாளர் சேவை மற்றும் செயல்பாட்டுத் தளங்களில் இந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கவுள்ளது.

மேலும் இயந்திய பயன்பாட்டு விஞ்ஞானம், மனிதவள மேம்பாடு, நிதி, சட்டத்துறைகளிலும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தவிருக்கிறது. 21 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய வேலைவாய்ப்புத் திருவிழாவாகவும் இந்தியாவின் திறனுக்கு அங்கீகாரம் அளிக்கும் நிகழ்வாகவும் இது இருக்கும் என்று கூறியிருக்கிறார்.

மேலும், 2025க்குள் எங்கள் நிறுவனம் நேரடியாகவும் மறைமுகமாகவும் 20 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளது. ஏற்கனவே இந்தியாவில் 10 லட்சம் நேரடி மற்றும் மறைமுக வேலைகளை உருவாக்கியுள்ளோம். கொரோனாத் தொற்றுநோய் நெருக்கடிகளின்போதுகூட, அமேசான் நேரடியாகவும் மறைமுகமாகவும் 3 லட்சம் பேருக்கு வேலை வழங்கியது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## மத்திய அரசுக்குக் கிடைத்த 23 லட்சம் கோடி ரூபா எங்கே?

### இந்திய மத்திய அரசிடம் ராகுல் காந்தி கேள்வி

மத்திய அரசின் பொருளாதார நடவடிக்கைகளால் பிரதமர் மோடியின் நான்கைந்து நண்பர்களுக்கே பலன் கிடைப்பதாக ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

டெல்லியில் காங்கிரஸ் எம்.பி.ராகுல் காந்தி செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர், கடந்த 7 ஆண்டுகளில் பெற்றோல், டீசல் , எரிவாயு மூலம் மத்திய அரசுக்கு கிடைத்த 23 லட்சம் கோடி ரூபா எங்கே சென்றது? ஒரு பக்கம் பண மதிப்பிழப்பையும் மற்றொரு பக்கம் பணமாக்குதல் திட்டத்தையும் அறிவிக்கிறார்கள்.

விவசாயிகள், தொழிலாளர்கள், மாத ஊதியதாரர்கள் உள்ளிட்டோர் வருவாய் இழப்புக்கு ஆளாகியுள்ளனர். பா.ஜ.க. ஆட்சி பொறுப்பேற்ற 2014 க்குப் பிறகு பெற்றோல் 42 சதவீதம், டீசல் 55 சதவீதம் விலை உயர்த்தப்பட்டுள்ளன. கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ள நிலையில், உள்நாட்டில் பெற்றோலியப் பொருள்களின் விலை தொடர்ந்து அதிகரிப்பது ஏன்? மத்திய அரசின் பொருளாதார நடவடிக்கைகளால் பிரதமர் மோடியின் நான்கைந்து நண்பர்களுக்கே பலன், என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.




# மட்டக்களப்பில் இரண்டாம் கட்ட தடுப்பூசி

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நேற்று கொவிட் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நிலையிலும் பெருமளவான மக்கள் ஆர்வத்துடன் தங்களுக்கான தடுப்பூசிகளைப் பெற்றுச்செல்வதை காணமுடிந்தது.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட மஞ்சந்தொடுவாய், நாவற்குடா, கல்லடி, கூழாவடி, சேற்றுக்குடா ஆகிய பகுதிகளில் உள்ள 30வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

நேற்று 30வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றப்பட்ட அதேநேரம் இதுவரையில் எந்த தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

குறித்த பகுதிகளில் உள்ள 3,300பேருக்கு நேற்று கொவிட் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.கிரிசுதன் தெரிவித்தார்.

இதுவரையில் எந்தவித தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்ளாத 30வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் தங்களுக்குரிய தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.

# பாடசாலையில் கணனிகள் திருட்டு
## சந்தேகத்தில் 2 பேர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி செல்வநகர் சிவா வித்தியாலயத்தின் கணனி அறை கதவை உடைத்து அங்கிருந்த மூன்று கணனிகள் மற்றும் பொருள்கள் திருடிய சம்பவம் தொடர்பாக சந்தேகத்தில் இருவரை நேற்று வியாழக்கிழமை கைது செய்துள்ளோம் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.



குறித்த பாடசாலை பூட்டப்பட்டிருந்த நிலையில் கடந்த புதன் கிழமை இரவு பாடசாலையின் கணனி பிரிவு அறையின் கதவை உடைத்து அங்கிருந்த மூன்று கணனிகள், ஒரு மவுஸ், கீவோட் என்பன திருடப்பட்டுள்ளன. இது தொடர்பாக பாடசாலை அதிபர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பாடசாலைக்கு அருகாமையிலுள்ள 22, 24 வயதுடைய இருவரை சந்தேகத்தில் கைது செய்துள்ளோம் எனவும் இவர்களை விசரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பு காத்தான்குடியில் ஹெரோயினுடன் 6 பேர் கைது

மட்டக்களப்பு காத்தான்குடியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் 6 பேரை நேற்று வியாழக்கிழமை நள்ளிரவில் கைது செய்துள்ளோம் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான நேற்று நள்ளிரவு 12 மணியளவில் காத்தான்குடி பகுதிகளில் உள்ள வீடு ஒன்றினை முற்று கையிட்டபோது அதில் 6 பேரை ஒரு கிராம் 10 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்தனர். இவ்வாறு கைது செய்தவர்களை இன்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை தொடர்ச்சியாக நாளாந்தம் போதைப்பொருளுடன் 2 பேருக்கு மேற்பட்டோரை பொலிஸார் கைது செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு வவுணதீவு வயல்பகுதில் மூன்று கைக்குண்டுகள் மீட்பு

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள பாவக்கொடிச்சேனை கற்பகேணி வயல் பகுதியில் கைவிடப்பட்டிருந்த நிலையில் 3 கைக்குண்டுகளை நேற்று வியாழக்கிழமை மீட்டுள்ளமையோடு இதனை வெடிக்க வைத்து செயலிழப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுவருகிறோம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய குறித்த வயல்பகுதியில் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து நேற்று மாலை இந்த கைக்குண்டுகள் மீட்கப்பட்டதுடன் இதனை வெடிக்க வைப்பதற்கான நீதிமன்ற உத்தரவை பெற்று இன்று வெள்ளிக்கிழமை வெடிக்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட யுவதி வாழைச்சேனையில் நேற்றுக் கைது

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஓமனியான் மடு பகுதியில் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தில் யுவதி ஒருவரை 30 போத்தல்கள் கசிப்புடன் நேற்று இரவு கைது செய்துள்ளோம் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து சம்பவதினமான நேற்று இரவு குறித்த பகுதியிலுள்ள வீடு ஒன்றை பொலிஸார் முற்றுகையிட்டனர் இதன்போது கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட 22 வயதுடைய இளம் யுவதி ஒருவரை கைது செய்ததையுடன் 30 போத்தல்கள் கசிப்பையும் கைப்பற்றினர். சந்தேக நபரை வாழைச்சேனை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்



# மட்டக்களப்பில் 109 வயதுடைய மூதாட்டி கொரோனாத் தொற்றினால் உயிரிழப்பு

மட்டக்களப்பில் 109 வயதுடைய மூதாட்டி ஒருவர் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளார் என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த செம்பகுட்டி செல்லம்மா என்பவரே கொரோனா நோய்த் தொற்றுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் தற்போது இவரது சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.



# மட்டக்களப்பு கல்முனை வடக்கில் 2,000 ரூபா கொடுப்பனவு வழங்கல்

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டம் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்துள்ள குடும்பங்களுக்கு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் கணிப்பீடுகள் செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு முதலாம் கட்ட கொடுப்பனவு 2,000 ரூபா வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கல்முனைப் வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கல்முனை 1-சி பிரிவில் 35 குடும்பங்களுக்கும் கல்முனைப் 1-ஈ பிரிவில் 30 குடும்பங்களுக்கும் 2,000 ரூபா நிவாரணக்கொடுப்பனவு வழங்கப்பட்டது.

கல்முனைப் 1-சி,1-ஈ பிரிவு கிராமசேவகர் தம்பிராசா சந்திரகுமார் தலைமையில் சக உத்தியோகஸ்தர்களால் மக்களின் வீடுகளுக்குச் சென்றும் காரியாலயத்திலும் கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன் மேலும் 40 குடும்பங்களுக்கு விரைவில் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் கிராமசேவகர் தெரிவித்தார்.

# இலங்கை கிரிக்கெட் அணியிடம் அடி பணிந்தது முதல் ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா



தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியில், இலங்கை அணி 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில், 1-0 என்ற கணக்கில் இலங்கை அணி முன்னிலை பெற்றுள்ளது.

கொழும்பு. ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அவிஷ்க பெனார்ன்டோ 118 ஓட்டங்களையும் சரித் அசலங்க 72 ஓட்டங்களையும் எடுத்தனர். தென்னாபிரிக்க அணியின் ரபாடா மற்றும் கேசவ் மஹாராஜ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 301 என்ற வெற்றி இலக்கை நோக்கிக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 286 ஓட்டங்களையே பெறமுடிய, இதனால் இலங்கை அணி 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. மார்க்ரம் 96 ஓட்டங்களையும் வண்டர் டுஸன் 59 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். இலங்கை அணியின், அகில தனஞ்சய 2 விக்கெட்டுகளையும் சமிக கருணாரத்ன, வனிந்து ஹசரங்க மற்றும் பிரவீன் ஜயவிக்கிரம ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக சதமடித்த இலங்கை அணி வீரர் அவிஷ்க பெனார்ன்டோ தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

# சிம்பாப்வேயுடனான ரி—20 தொடர் அயர்லாந்து அணி கைப்பற்றியது

சிம்பாப்வே, அயர்லாந்து அணிகளுக்கிடையே 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் நடைபெற்றுவருகிறது. முதல் போட்டியில் சிம்பாப்வேயும் இரண்டாவது மற்றும் மூன்றாவது போட்டிகளில் அயர்லாந்து அணியும் வெற்றி பெற்றிருந்தன.

இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது போட்டி நேற்று நடைபெற்றது.



இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட அயர்லாந்து அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 174 ஓட்டங்களை எடுத்தது. கெவின் ஓ பிரையன் 47, போல் ஸ்ட்ரிலிங் 38, பல்பிர்னெ 36 ஓட்டங்களை எடுத்தனர். சிம்பாப்வே அணியின் மசகட்சா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து, 175 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சிம்பாப்வே அணி களமிறங்கியது. ஆனால் அயர்லாந்து அணியினரின் துல்லிய பந்துவீச்சில் சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் வீழ்த்தப்பட இறுதியில், சிம்பாப்வே அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 110 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. 64 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அபார வெற்றி பெற்றது. அயர்லாந்து அணியின் மார்க் அடெய்ர் 4 விக்கெட்களையும், னேகெட்கேட் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை அயர்லாந்து 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.






## டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்தில் வேகமான அரைச்சதம்

# இந்திய வீரர் ஷர்துல் தாக்கூர் சாதனை படைத்தார்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இங்கிலாந்து ஆடுகளமொன்றில் குறைந்தபந்துகளில்அரைச்சதமடித்து இந்தியாவின் சகலதுறைவீரர் ஷர்துல் தாக்கூர் சாதனைபடைத்திருக்கிறார். இவர் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் இயன் பொத்தமின் சாதனையை முறியடித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு எதிரான ஓவல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 191 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. ஆனாலும் எட்டாவது துடுப்பாட்டவீரராகக் களமிறங்கிய ஷர்துல் தாக்கூர், 31 பந்துகளில் அரைச்சதம் விளாசினார். அதுவும் ரொபின்சன் வீசிய பந்தில் சிக்சர் அடித்து அவர் தனது அரைச்சதத்தைப் பூர்த்திசெய்திருந்தார்.

இங்கிலாந்தில் டெஸ்ட் போட்டியொன்றில் குறைந்த பந்துகளில் அரைச்சதம் எடுத்த பெருமை இதற்கு முன்பு, முன்னாள் இங்கிலாந்து அணித்தலைவர் இயன் போத்தம் வசமிருந்தது. 1986 இல் நியூசிலாந்துக்கு எதிராக 32 பந்துகளில் அவர் அரைச்சதம் எடுத்திருந்தார். அந்தச் சாதனையை முறியடித்துள்ளார் ஷர்துல் தாக்கூர். நூறு ஆண்டு வரலாறு கொண்ட இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட்டில் குறைந்த பந்துகளில் அரைச்சதம் எடுத்தவர் என்கிற பெருமையை ஷர்துல் தாக்கூர் தனதாக்கியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிராக குறைந்த பந்துகளில் எடுக்கப்பட்ட அரைச்சதங்களின் வரிசையில் ஷர்துல் தாக்கூருக்கு மூன்றாவது இடம் கிடைத்திருக்கிறது. அதே போல, கபில் தேவ் 1982 இல் 30 பந்துகளில் பாகிஸ்தானுக்கு எதிராக அரைச்சதம் எடுத்ததே இன்று வரை டெஸ்ட் போட்டிகளில் வேகமாக அரைச்சதமடித்த இந்திய சாதனையாக உள்ளது. 31 பந்துகளில் அரைச் சதம் எடுத்த ஷர்துல் தாக்கூருக்கு இந்தப் பட்டியலில் இரண்டாமிடம் கிடைத்துள்ளது.



# அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் மூன்றாவது சுற்றில் ஜோகோவிச்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டித் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த இரண்டாவது சுற்று ஆட்டமொன்றில் உலகின் முதல் நிலை வீரரான செர்பியாவை சேர்ந்த நோவக் ஜோகோவிச்சும், நெதர்லாந்தைச்சேர்ந்த டாலன்கிரீக்ஸ்பூரும் மோதினார்கள். ஆரம்பம் முதலே ஜோகோவிச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். முதல் செட்டை 6-2, இரண்டாவது செட்டை 6-3, மூன்றாவது செட்டை 6-2 என கைப்பற்றி அசத்திய ஜோகோவிச், நேர் செட்டுகளில் வென்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

# தேங்காய் நீருடன் உப்பு மற்றும் தேசிக்காய் சேர்த்துக் குடித்தால் கொவிட் தாக்காதாம்!

## இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோ சொல்கிறார்



நாட்டில் கொவிட் தொற்று தீவிரமடையும் சந்தர்ப்பத்தில் வைத்திய நிபுணர்கள் பரிந்துரைத்த சில விடயங்களை இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோ வெளியிட்டுள்ளார்.

தேங்காய் நீருடன் தேசிக்காய் மற்றும் உப்பு சேர்த்து பருகினால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் என வைத்திய நிபுணர்கள் பரிந்துரைத்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தேங்காய் நீரில் தேசிக்காய் சேர்த்து குடிப்பதால் உடலுக்கு சக்தி கிடைக்கின்றது என உலகில் பல நாடுகள் நம்புகின்றன.

இதுவே வைத்திய நிபுணர்கள் உட்பட மருத்துவ துறையைச் சேர்ந்த பலரின் கருத்தாக இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# முடிந்தால் இரு முகக்கவசம் அணிக அமைச்சர் சுதர்ஷினி கோரிக்கை!



முடிந்தால் இரண்டு முகக்கவசங்களை அணியுமாறு இராஜங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே நாட்டு மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டில் கொவிட் தொற்று வேகமாக பரவி வருவதால், இரண்டு முகக்கவசங்களை அணியுமாறு அவர் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வீட்டை விட்டு வெளியில் செல்லும் போது முகக்கவசம் அணிவது மிகவும் முக்கியம் என்பதை மக்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசிகள் என்ன என்று தேர்வு செய்யாமல் அருகில் உள்ள தடுப்பூசி நிலையங்களுக்கு சென்று உடனடியாக கொவிட் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளுமாறு அவர் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். சில தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டால் வெளிநாட்டில் குடியேற முடியாமல் போய் விடும் என சிலர் நினைக்கின்றார்கள். முதலில் நாங்கள் உயிர் வாழ வேண்டும். அதன் பின்னரே வெளிநாடுகள் பற்றி சிந்திக்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தடுப்பூசிகளின் வகைகளைத் தெரிவு செய்துகொண்டிருப்பது பொருத்தமில்லாத ஒரு செய லாகும் என இராஜங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே மேலும் தெரிவித்துள்ளார்.

# அமரர் ஆலாலசுந்தரத்துக்கு கல்வியங்காட்டில் அஞ்சலி!





தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோப்பாய் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கல்வியங்காடு மண்ணின் மைந்தனுமான வழக்கறிஞர் அமரர் முருகேசு ஆலாலசுந்தரத்தின் 36 ஆவது சிரார்த்த தினம் நேற்று (வியாழக்கிழமை) கல்வியங்காடு நல்லூர் வன்னியசிங்கம் மன்றத்தில் மிக எளிமையான முறையில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெற்றது.

நல்லூர் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமாகிய சண்முகலிங்கம் சுரேஸ் குமாரின் ஏற்பாட்டில் கல்வியங்காடு வன்னிய சிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அன்னாரது உருவப்படத்துக்கு விளக்கு ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றவற்றின் கோப்பாய் தொகுதி ஆதரவாளர்கள் பலர் கலந்து அமரர் ஆலாலசுந்தரத்துக்கு அஞ்சலி செலுத்தினர்.

# ரிஷாத்தின் சிறைக்குள் கைப்பேசி கண்டுபிடிப்பு!



தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உள்ள சிறை அறையில் இருந்து கைத்தொலைபேசி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ரிஷாத் பதியுதீன் அடைக்கப்பட்டிருந்த சிறையை தலைமை சிறை அத்தியட்சகரும் மற்றொரு சிறைக்காவலரும் நெருங்கியபோது, அவர் கைத்தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தமை அவதானித்தனர் என சிறைச்சாலை பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். பின்னர் ரிஷாத் பதியுதீன் குறித்த கைபேசியை வெளியே எறிந்தார் என்றும் அந்தக் கைத்தொலைபேசி சிறை அதிகாரிகளால் மீட்கப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

சிறைச்சாலை கட்டளையின் கீழ் கைதி ஒருவர் தனது கைபேசியை வைத்திருப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என சிறைச்சாலை பேச்சாளர் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை நடத்திய தீவிரவாதிகளுக்கு உதவினார் என பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள ரிஷாத் பதியுதீன் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை முன்னதாக, சிறைச்சாலை மருத்துவர் ஒருவருக்கு ரிஷாத் பதியுதீன் கொலை மிரட்டல்கள் விடுத்தார் என்ற குற்றச்சாட்டு தொடர்பான விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாகனங்களின் விலைகள் கட்டுக்கடங்காது உயர்வு

நாட்டில் இன்று கட்டுக்கு அடங்காத வகையில் வாகனங்களில் விலை உயர்ந்துள்ளதாகவும், மாஃபியா மோசடியாளர்களின் செயற்பாடுகள் காரணமாகவே இவ்வாறு விலை உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலபே பகுதியைச் சேர்ந்த கார் விற்பனை நிலையம் ஒன்றின் உரிமையாளர் இதனைத் தெரிவித்துள்ளார். இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் கூறியுள்ளார். வாகனங்களின் விலை அதிகரிப்பு செயற்கையானது எனவும் அது ஒரு வகையான மாஃபியா குழுவின் செயற்பாடு என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

சாதாரண வாகனங்களின் விலையில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இதுபோன்ற நியாயமற்ற விலையில் வாகனங்களை வாங்க வேண்டாம் என்றும் அவர் மக்களைக் கோரியுள்ளார்.

மிகக் குறைந்த விலையில் கொண்டுவரப்பட்ட வாகனங்களை மறைத்து வைத்து எதிர்காலத்தில் அதிக விலைக்கு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# ஊரடங்கின் பயனை முழுமையாக அடைய மேலும் இருவாரங்கள் நாடு முடக்கப்பட வேண்டும்

## வைத்தியர் அசேல குணவர்தன தெரிவிப்பு



இலங்கையில் தற்போது அமுலிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தின் பயனை அடைய மேலும் இரண்டு வாரங்கள் நாடு முடக்கப்பட வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றினால், புதிதாக உருவாகும் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து நாட்டை மீண்டும் திறக்க முடியும் என அவர் கூறியுள்ளார்.

ஒக்ரோபர் நடுப்பகுதிக்குள் நாட்டு மக்களுக்கு முழுமையாக தடுப்பூசி செலுத்திவிட்டால் ஒக்ரோபர் மாதம் இறுதிக்குள் நாடு இயல்பு நிலைக்கு திரும்பும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கையில் பூஸ்டர் தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

டெல்டா மாறுபாடு நாட்டில் பரவியதன் காரணமாக தினசரி கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் நிதியமைச்சர் மங்களவின் நினைவாக வறிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்

## வழங்கினார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



கொழும்பில் பொருளாதார நெருக்கடிக்குள்ளான 175 குடும்பங்களுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உதவியுள்ளார்.

குறித்த குடும்பங்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகளை வழங்குவதற்கு அவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

முன்னாள் அமைச்சரான மங்கள சமரவீர உயிரிழந்து இரண்டு வாரங்களாகியுள்ளது. தனது மிகவும் நெருங்கிய நண்பரான மங்களவின் நினைவாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இந்த உதவியை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் அவர் பேஸ்புக் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். கொவிட் தொற்று காரணமாக மிகவும் நெருக்கடியான நிலைமைக்கு முகம் கொடுத்துள்ள குடும்பங்களைத் தெரிவு செய்து இந்த உணவுப் பொதியை வழங்க நடவடிக்கை எடுத்தேன்.

சிரமமான காலம் என்ற போதிலும் சுகாதார ஆலோசனைகளை பின்பற்றுமாறு முன்னாள் ஜனாதிபதி பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.09.2021இல் வெளியிடப்பெற்றது.